Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 6 வியாழக்கிழமை (18-02-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:71

## ஒபடகே யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப். 18

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த வட மாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் எஸ். ஒபடகே யாழ். செயலகத்தில் திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார்.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களத் தலைவர்களும் கலந்து

( 10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தரப்புக் குற்றச்சாட்டை மறுக்கிறது ஈ. பி. டி. பி. அமைப்பு!

யாழ்ப்பாணம், பெப். 18

''வடக்கில் பொதுமக்கள் எவரையும் இயக்கங்கள் கைது செய்ய முடியாது'' என்ற தலைப்பில் — வடபகுதிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சி. ஆர். லொஹான் குணவர்த்தனா அனுப்பி வைத்த கடிதம் ஒன்றை மேற்கோள் காட்டி — நேற்றைய உதயனில் வெளியான செய்தி தொடர்பாக நிலைமையைத் தெளிவுபடுத்தி ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல் தலைமையகம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் அக்கட்சி தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

பரராஜசிங்கம் பாஸ்கரன் என்பவரை எமது கட்சி கைது செய்ததாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட தகவலில் எந்த உண்மையுமில்லை என்பதை ஆணித்தரமாகத் தெரிவிக்கிறோம்.

இந்தத் தகவல் எமது கட்சிக்கு மக்கள் மத்தியில் அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டதொன்றாகும்.

நாம் மனித உரிமைகளை மதிக்கின்ற அதே வேளையில் இன்று இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களை மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றுக்குத் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுடப்பட்ட பெண் பொலீஸ் மரணம்

வவுனியா, பெப். 18

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தமிழ் பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் நேற்று மரணமானார்.

தமது கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இனந் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சை பெற்று வந்தார்.

சிவகுமாரி (வயது 26) என்பவரே இறந்த பெண் கான்ஸ்டபிள் ஆவார். (இ-3-164)

# ராணுவ முகாம் மீது படையினர் தாக்குதல்

## திருமலையில் சம்பவம் 20 பேர் விசாரணையில்

கொழும்பு, பெப்ரவரி 18

திருகோணமலை மாவட்டம் வில்கம்வெஹெர இராணுவ முகாம் அதே முகாமைச் சேர்ந்த ஒரு தொகுதி படையினரால் கடந்த சனிக்கிழமை தாக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 20 படையினர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் 'லங்கா தீப' திருகோணமலை செய்தியாளர் திருமதி விசாகா ஜயசேகரா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பாணியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் கைது

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து மனித உரிமைகள ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த பல்கலைக்கழக ஊழியரான செல்வரஞ்சன் செல்வக்குமார் (38 வயது) என்பவரே கைதானவர் ஆவார்.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியான எஸ். சிறீதரன் படை அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவையில் விவசாயிகள் மீது தாக்கு

### துப்பாக்கிகள் அபகரிப்பு

மட்டக்களப்பு, பெப். 18

பொலன்னறுவை மாவட்டம், அரலகங்வில் கிராமத்தில் நேற்று நண்பகல் விவசாயிகள் மீது ஆயுதபாணிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு விவசாயி பலியானார்.

வயல் அறுவடை வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் மேலும் இரு விவசாயிகள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றுமொரு விவசாயி தாக்குதலின் போது காணாமல் போய்விட்டார்.

விவசாயிகளின் தற்பாது காப்புக்காக வழங்கப்பட்ட மூன்று துப்பாக்கிகளும் ஆயுதபாணிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (இ—21)

## கொலையாளிக்கு புகலிடம்: இத்தாலி -- இலங்கை உறவில் முறுகல் நிலை

ரோம், பெப். 18

இத்தாலியில் இத்தாலிய பெண் ஒருவரைக் கொலை செய்துவிட்டு இலங்கைக்குத் தப்பிவந்துள்ள இலங்கையர் ஒருவரை இத்தாலிக்கு திருப்பி அனுப்பும்படி இத்தாலிய அரசு இலங்கை அரசைக் கோரி உள்ளது.

இதற்கு இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்ததை அடுத்து இலங்கை அரசுக்கும் இத்தாலிய அரசுக்கும் இடை

[10 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியாவில் புளொட் முகாம்கள் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதி

## படையினருடனான சந்திப்பில் இணக்கம்

வவுனியா, பெப். 18

வவுனியாவில் புளொட் அமைப்பினர் தற்போது வைத்திருக்கும் முகாம்களை அவர்கள் தொடர்ந்து பேண படையினர் நேற்று அனுமதி வழங்கினர்.

வவுனியா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜயந்த கொட்டகொட, நகரத் தளபதி கேணல் சில்வா, செட்டிகுளம் தளபதி பிரிகேடியர் சாலிய குலதுங்க ஆகியோருடன் நேற்று நடந்த சந்திப்பிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட புளொட் பிரதித் தலைவர் என். மாணிக்கதாசன் கருத்துத் தெரிவிக்கையில், எமது முகாமை ஓரிடத்தில் தனியாக வைத்திருக்க முடியாத நிலை உள்ளது. எமது அமைப்பில் கூடுதல் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதாலும், விடுதலைப் புலிகளின் தாக்குதலை தவிர்க்கவும் தற்போதுள்ளது போன்று பரவலாக எமது முகாம்கள் அமைந்திருக்கவேண்டும்.

அவ்வாறு இருக்க அனுமதிக்காத பட்சத்தில் நாம் காட்டுக்குள்தான் போக வேண்டி ஏற்படும் — என்று தெரிவித்தார்.

இதையடுத்து தற்போதுள்ளது போன்று முகாம்கள் இருக்க அனுமதிக்க படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

முகாம்களை மூடும் உத்தரவு எம்முடன் கலந்தாலோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 2 சடலங்கள் படையினரால் ஒப்படைப்பு

வவுனியா, பெப். 18

கனகராயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் இருவரின் சடலங்கள் நேற்று வன்னிக்கு அனுப்பப்பட்டன.

வவுனியா ஆஸ்பத்திரியில் படையினரால் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோர் பொறுப்பேற்று புலிகளிடம் ஒப்படைப்பதற்காக நேற்று வன்னிக்கு அவற்றை அனுப்பி வைத்தார். (இ—3—164)

## கிரனேட் வெடித்து சிப்பாய் காயம்

சாவகச்சேரி, பெப். 18

சாவகச்சேரி, நுணாவில் பாதுகாப்பு அரண் பகுதியில் கிரனேட் வெடித்து இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை 10-30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பாதுகாப்பு அரணில் கடமையிலிருந்த இராணுவத்தினரின் கிரனேட் தவறுதலாக விழுந்து வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இராணுவச் சிப்பாய் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

(இ-5-31 117)

## வன்னியில் படையினர்பலி

கொழும்பு, பெப். 18

வன்னிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு படையினர் பலியானார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை—வன்னியின் வேறோர் பகுதியில் நடந்த தாக்குதலில் 4 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இராமகிருஷ்ணர் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், பெப் 18

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 164 ஆவது பிறந்த தினம் இன்று வியாழக்கிழமை திருநெல்வேலி இராமகிருஸ்ணாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றையதினம் விஷேட பூஜையும், பஜனைகளும் இடம்பெறுவதுடன் மகேசுர பூஜையும்நடைபெறவுள்ளது. (ஐ-க)

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
**திரு. க. கந்தசாமி அவர்களின்**
தந்தையார்

**க. கணபதி** அவர்கள்

இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**மகாஜன கல்லூரிச் சமூகம்,**
**தெல்லிப்பழை.**

(சி/6540)

## மரண அறிவித்தல்கள்

### வினாசித்தம்பி சுவாமிநாதன்

(முன்னாள் ஊழியர் கல்வித் திணைக்களம்)

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், புதிய செங்குந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சுவாமிநாதன் 15-02-99 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், குகனேஸ்வரி, மனோரஞ்சன், ஜெனரஞ்சன், ஜெனரஞ்சனி, செல்வரஞ்சன், குகராஜினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பத்மநாதன், குணரட்ணம், திலகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜன், ஆரணி ஆகியோரின் பெரிய தந்தையும், சுஜீவன், சஜீவன், சஞ்ஜீவன், சுபர்னா, சகானா, நிஷானி, நிதூஷன், நிஷாந்தினி, அனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-02-99) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறவுள்ளன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
**P. கதீரேசு**
(மாமனார்)

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (63243)

### விஜயசுந்தரம் விஜயகுமாரன்

(சிறி)

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட விஜயசுந்தரம் விஜயகுமாரன் 16-2-99 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் விஜயசுந்தரம் இராஜநாகேஸ்வரியின் மூத்த புதல்வனும், நந்தினியின் கணவரும், துஷாரி, விஜேராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோதிலிங்கம் (மூளாய்), விஜயபாலன் (ஜேர்மனி), விஜயராஜன் (கனடா), பத்மநாதன் (ஜேர்மனி), குகேந்திரன் (நோர்வே), வேதமூர்த்தி (கனடா), சேகரன் (நெல்லியடி பிரதேச சபை நூலக உதவியாளர்), மனோகரன் (படப்பிடிப்பாளர் வாசு — கொழும்பு), திரிபுரசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**திருமதி இ. விஜயசுந்தரம்**
(தாய்)

595 / 5, நாவலர் வீதி,
நல்லூர். (63228)

### கனகசுந்தரம் திருநாவுக்கரசு

(யாழ்., பல்கலைக்கழக மருத்துவ பீட ஊழியர்)

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த சனகசுந்தரம் திருநாவுக்கரசு 16-02-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகசுந்தரம்—காலஞ்சென்ற பார்வதி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் அன்னலட்சுமி, விமலாதேவி, ஒப்பிலாமணி (உரிமையாளர், மணி அன் கோ, வவுனியா), காலஞ்சென்ற இலங்கேஸ்வரன், கிருஷ்ணதாஸ் (சுவிஸ்), சித்திரா (லண்டன்), சரோஜாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனிப்புலிசிங்கமுதலியார் (சுவிஸ்), வேலுப்பிள்ளை, சிவமலர், சரஸ்வதி, அருட்சோதி (சுவிஸ்), குலேந்திரபாபு (லண்டன்), தேவராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-02-99) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி. ப. 2 மணியளவில் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி தனிப்புலிசிங்கமுதலியார்**
(சகோதரி—லீலா)

பயரிக்கூடல்,
காரைநகர். (63229)

## நாளையே விசாரணை

ஏழாலை மேற்குப் பகுதியில் கடந்த வாரம் பொது மக்கள் படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் இன்று நடைபெறவிருந்த விசாரணை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சமய சந்நிதியில்

உடுப்பிட்டி இமையாணன் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 21 ஆம் திகதி நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

உற்சவங்கள் தொடர்ந்து நடைபெற்று 9 ஆம் நாள் தேர் உற்சவமும், 10 ஆம் நாள் மாசிமகத் தினத்தன்று தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-15-109)

★ ★ ★

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 26 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் அடுத்த மாதம் 1 ஆம் திகதி மாசிமகத் தீர்த்தத்துடன் உற்சவம் நிறைவடையும்.

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இது வரை காலமும் அலங்காரத் திருவிழா இடம்பெற்று வந்த மேற்படி ஆலயத்தில் இந்த வருடம் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் இடம்பெறுகின்றது. (இ)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை**
இன்று காட்சிகள்
10-30, 2-30.
(சி/6410)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
சௌந்தர்யா,
மணிவண்ணன், வடிவேலு
நடித்த
வெள்ளி நிலா
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63093)

**நாகம்ஸ்**
இன்று மட்டும்
பிரபு, சுகன்யா,
ராதாரவி, விசு
நடித்த
**சின்னமாப்ளே**
காட்சிகள்: 10-30, 2-30
நாளை முதல்
உள்ளத்தை
அள்ளித்தா
இந்தியாவில் 200 நாள்களுக்கு மேலாக ஓடிய
வெற்றிச் சித்திரம்
(63219)


## தவறிவிட்டது

கப்பலில் வந்து 14 — 02 — 99 அன்று காங்கேசன் துறையில் இருந்து சாவகச்சேரிக்கு வந்த லொறியில் இருந்து முத்தாலிங்கம் பத்மாவதி ஆகிய எனது கறுப்பு நிற பிரயாண பாக் (BAG) தவறுதலாக மாறி எடுக்கப்பட்டுவிட்டது. அதனுள் மிக முக்கிய ஆவணங்களும் அல்பமும் உடுதுணிகளும் உள்ளன. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

N. முத்தாலிங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி (63223)

நாச்சிமார்கோயிலுக்கு முன்பாக உள்ள

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் (628/3) 958/4 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகள், விறாந்தை, தனிக் கிணறு மற்றும் மலசல கூட வசதியுடன் உள்ள வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(63224)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
**றெஜினோல்ட்டின் தாயார்**
திருமதி
**செபரத்தினம் அலெக்ஸ்சாந்தியம்மா**

அவர்களின் திடீர் மரணத்தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ச. சுஜேன்**

(63227)

## கண்ணீர் அஞ்சலி


### அருளானந்தம் சின்னத்துரை

அவர்களின் இழப்பினால் துயருறும் யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. செயலாளர்,
தேசிய வை. எம். சி. ஏ. நிறுவனத்தின் உப செயலாளர்,
திருவாளர்கள் சி. ஜெயராஜசிங்கம், சி. விஜயகுலசிங்கம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**யாழ்ப்பாண வை. எம். சி. ஏ, ஆளுநர் சபை,**
**அங்கத்தினர், ஊழியர்.**

(சி/6542)

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 — 07 — 1943 | 01 — 03 — 1998 |

அமரர்
**கந்தையா செல்வநாயகம்**
**மின் கம்பி இடுபவர் சகா**
(வலி. கிழக்கு பிரதேச சபை, உரும்பிராய்)

திதி: 18 — 02 — 1999

எங்கள் குல விளக்கே! தந்தையே!
எங்கே இருக்கின்றீர்?
பாரினில் நாம் வாழப் பார்த்திருப்பீர் என்றிருந்தோம்!
பாதியில் எம்மை விட்டுப் பிரிந்து விட்டீர்!
பாசத்தைப் பொழிந்து பண்புடன் வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது சென்றுவிட்டீர்?
பாவிகள் நாங்களிங்கு பரிதவிக்கின்றோம்
உங்களை நினைத்து உணர்விழந்து வாடுகின்றோம்
பொய்யான இந்த உடல் எமை விட்டுப் பிரிந்தாலும்
மெய்யான உங்களுயிர் எம்மோடு இருக்கும் ஐயா!

பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

புதுறோட்,
ஆறுகால்மடம். (சி/6541)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்டிஷ் கெரில்லா தலைவர் கைது!

அங்காரா, பெப். 18

14 ஆண்டு கால கெரில்லா போருக்குத் தலைமை வகித்தவரும் துருக்கிய அரசினால் தேடப்பட்டு வந்தவருமான குர்டிஷ் கெரில்லாத் தலைவர் அப்துல்லா ஒகலன் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார். கடந்த திங்கள் இரவு துருக்கிய அதிகாரிகளால் கென்யாவில் கைது செய்யப்பட்ட அவர் அங்கிருந்து விமானம் மூலம் துருக்கிக்குக் கொண்டு வரப்பட்டு இஸ்தான்புல்லில் பலத்த பாதுகாப்பான மறைவிடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

துருக்கியில் ஒரு பயங்கரவாதியாகவும், துரோகியாகவும் கருதப்படும் ஒகலன் நீதியின் முன் நிறுத்தப்பட்டு பெரும்பாலும் அவருக்கு மரண தண்டனை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



அப்துல்லா ஒகலன்

துருக்கிய அரசாங்கத்துக்கு எதிராக பி.கே.கே. எனப்படும் குர்டிஷ் தொழிலாளர் கட்சி 14 ஆண்டு காலமாக வன்முறை வழிகளில் போராடி வந்துள்ளது இந்த அமைப்புக்கு தலைமை வகித்த ஒகலன் துருக்கியின் எல்லையில் உள்ள சிரியாவில் முகாம் அமைத்து அங்கிருந்து செயற்பட்டு வந்தார்.

சிரியாவுக்கு எதிராக ராணுவநடவடிக்கை எடுக்கப்படும் என துருக்கி எச்சரித்ததை அடுத்து கடந்த ஆண்டு ஒக்ரோபரில் ஒகலன் அங்கிருந்து வெளியேறி ரஷ்யாவுக்கும் பின்னர் இத்தாலிக்கும் சென்றார். இத்தாலியில் அவர் தஞ்சம் கோரினார். ஆனால் துருக்கியின் தலையீட்டினால் தஞ்சம் கொடுக்க இத்தாலி மறுத்து விட்டது. அதனையடுத்து அவர் தலைமறைவு வாழ்க்கையினை மேற்கொண்டு வந்தார். [ஐ க]

# பல ஐரோப்பிய நாடுகளில் குர்டிஷ் மக்கள் ஆர்ப்பாட்டம்

## கிரேக்க தூதரகங்கள் முற்றுகை

ஏதென்ஸ், பெப். 18

குர்டிஷ் கெரில்லாத் தலைவர் அப்துல்லா ஒகலன் (அபு) கைது செய்யப்பட்டிருப்பதை அடுத்து ஐரோப்பா எங்கும் குர்டிஷ் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் குதித்துள்ளனர்.

நாடோடியாகத் திரிந்து வந்த ஒகலன் கடைசியாக நைரோபியில் உள்ள கிரேக்கத் தூதரகத்தில் தங்கியிருந்த சமயமே அங்கு சென்ற துருக்கியின் விசேட பாதுகாப்புக் குழுவினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டார்.

இதனால் குர்டிஷ் மக்கள் கிரேக்கம் மீது ஆத்திரமடைந்துள்ளனர்.

ஒகலனின் ஆதரவாளர்கள் நெதர்லாந்திலுள்ள கிரேக்க தூதுவரின் குடும்பத்தினரைப் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்துள்ளார்கள். குர்டிஷ் ஆர்ப்பாட்டக் காரர்கள் ஏதென்ஸிலும் லண்டனிலும் உள்ள கிரேக்கத் தூதரகங்களுக்கு முன்னால் பெருமளவில் தற்கொலை செய்யப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளார்கள்.

வியன்னாவிலுள்ள கென்யத் தூதரகம் மற்றும் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஐரோப்பிய தலைமையகம் என்பனவற்றைப் போன்று குறைந்தது 12 ஐரோப்பிய நகரங்களில் கிரேக்க தூதரகங்களும் உதவித்தூதரகங்களும் குர்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அல்லது தாக்கப்பட்பட்டுள்ளன.

குர்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா, பெல்ஜியம் டென்மார்க் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள கிரேக்க தூதரகங்களையும் உதவித் தூதரகங்களையும் முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

ஒகலனைப் பற்றி செவ்வாய்க்கிழமை கென்ய அரசாங்க அதிகாரிகள் எதுவும் கூறவில்லை. அவரை ஒரு பயங்கரவாதி என்று வர்ணிக்கும் துருக்கி அவரை விசாரணை செய்ய விரும்புகிறது. ஒகலன் தஞ்சமடைய விரும்பும் நாடுகள் மீதெல்லாம் துருக்கி இராஜதந்திர நெருக்குதல்களைப் பிரயோகிப்பதால் அவர் நாடுவிட்டு நாடு ஓடிக்கொண்டிருக்கிறார்.

நிலைவரங்கள் தொடர்பாக பொய்யான தகவல்கள் கென்ய அதிகாரிகளினால் தொடுக்கப்பட்டே ஒகலன் கிரேக்கத் தூதரகத்தில் இருந்து வெளியே இழுத்தெடுக்கப்பட்டிருக்கிறார். — என்றே எனக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன என்று எபர்ஹார்ட் சுல்ட்ஸ் என்ற வழக்கறிஞர் ஜேர்மன் தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

ஒகலனுக்கு நேர்ந்திருப்பதை மிகவும் பயங்கரமானதும் புரியாததுமான ஒரு நிகழ்வு என்று ஒகலனின் குர்டிஷ்தான் தொழிலாளர் கட்சி (பி.கே.கே) வர்ணித்திருக்கிறது.

இதேவேளை — கைது செய்யப்பட்டுள்ள ஒகலன் சித்திரவதைகளுக்கு உட்படுத்தபடாமல் இருப்பதைத் துருக்கி அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ. நா. கோரி உள்ளது. இவர் கைது செய்யப்பட்ட விவகாரத்திலோ அல்லது கென்யாவில் இருந்து துருக்கியிடம் கையளிக்கப்பட்ட விடயத்திலோ அமெரிக்கா சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-க-10)

### பாக். கடும் போக்கு இஸ்லாமிய கட்சி

# வாஜ்பாயின் பயணத்தைத் தடுக்கத் திடசங்கற்பம்

லாகூர், பெப். 18

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாகிஸ்தானுக்கான பஸ் விஜயத்தை தடுக்க பாகிஸ்தானிய அடிப்படைவாத இஸ்லாமியக் கட்சியொன்று திங்களன்று திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்குள் பிரவசிக்கும் வகையில் இந்தியப் பிரதமர் பயன்படுத்தவிருக்கும் சகல பாதையும் தடை செய்வதற்குத்தாம்திடசங்கற்பம் பூண்டுள்ளதாக ஜமாத் இஸ்லாமியக் கட்சித்தலைவர் ஹாஸி ஹரைன் அகமத்லாகூரில் நடைபெற்ற பத்திரிகை மகாநாடொன்றில் தெரிவித்தார்.

புதுடில்லி — லாகூர் பஸ் சேவையினை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் வகையில் பிரதமர் வாஜ்பாய் வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படும் தினமான ஞாயிறன்று தமது கட்சி பொது வேலை நிறுத்தமொன்றில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வகையில் ஜமாத் பரந்தளவிலான ஆட்சேப நடவடிக்கைகளை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் இதன் அடிப்படையில் இந்தியப் பிரதமரின் வருகையினைத் தடுக்கும் வகையில் பெண்கள், பிள்ளைகள் வீதிகளின் குறுக்கே படுத்துத் தடை நடவடிக்கைகளில் ஈடுபடுவரெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் வாஜ்பாயின நல்லெண்ண நடவடிக்கைகளை பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் வரவேற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

(ஐ—க—10)

### கொசோவோ பிரச்சினை:

# மத்தியஸ்தர் இன்றி நேரடிப் பேச்சு

பாரிஸ், பெப். 18

கொசோவோ சமாதான பேச்சு வார்த்தைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. அல்பேனியப் பிரதிநிதிகளும் சேர்பியப் பிரதிநிதிகளும் முதல் தடவையாக நேரடிப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை தனித்தனி அறைகளில் இருந்து மத்தியஸ்தர்கள் மூலம் இருதரப்பினரும் பேச்சு வார்த்தை நடத்திவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட்டின் முயற்சியை அடுத்தே இரு தரப்பினரும் நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர்.

இதேவேளை இரு தரப்புப் பிரதிநிதிகளும் சமாதானத் தீர்வை நோக்கி சரியான திக்கில் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்றும் —

அவர்கள் நல்லதொரு தீர்வைக் காண்பதற்கு மேலும் ஒரு வார கால அவகாசம் தரப்படுவது அவசியம் எனவும் — மெடலின் ஆல்பிரைட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன பிரகாரம் எதிர்வரும் சனிக்கிழமை நண்பகல் வரை கால நீடிப்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால வரையறைக்குள் தீர்வைக் காண இரு தரப்பினரும் தவறும் பட்சத்தில் நேட்டோவின் விமானத் தாக்குதல்களுக்கு [illegible] கொடுக்கும் அபாய [illegible] உருவாகும்.

[இ-க]

### வேற்றுக் கிரக வாசிகள்

வேற்றுக் கிரகத்திலிருந்து வந்தவர்கள் தன்னைக் கடத்திச் சென்றதாகப் பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார். இது அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனில் பறக்கும் தட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சி செய்துவரும் குழுவின் தலைவர் நிக்போப்பின். இவர் சில நாள்களுக்கு முன் தன்னுடைய காதலியுடன் ஆள் நடமாட்டமில்லாத சாலையில் காரில் பயணம் செய்தபோது வேற்றுக் கிரகவாசிகள் தங்களைக் கடத்திச் சென்றனர் என்றுகூறிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஆனால் இதனை அவருடன் பணியாற்றுபவர்களே நம்ப மறுக்கின்றார்கள். வேற்றுக் கிரகங்களிலிருந்துபூமிக்கு வருபவர்களைப் பற்றி நிக் பல தடவை இவ்வாறு கூறியுள்ளதால் தற்போதும் அவரை நம்ப மறுக்கின்றனர். இதனால் பறக்கும் தட்டில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்[illegible] [illegible] இன்னமும் நடுங்கிக் கொண்டிருக்கிறார் நிக். [ஐ-10]

# லோக்தள் கட்சி ஆதரவை விலக்கியது

## இந்திய அரசுக்கு நெருக்கடி

புதுடில்லி, பெப். 18

இந்திய தேசிய லோகதளக் கட்சி இதுவரை காலமும் மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவைச் செவ்வாய்க்கிழமை ரத்துச் செய்ததைத் தொடர்ந்து மத்திய அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்தே இக்கட்சி பாரதீயஜனதா கட்சித் தலைமையிலான மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற முடிவு செய்ததாக அதன் தலைவர் ஓம் பிரகாஷ் சௌதாலா தெரிவித்தார்.

இக்கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் தற்போது மக்களவை உறுப்பினர்களாக இருக்கின்றனர். தற்போதைய நிலையில் இவர்களது ராஜினாமா மத்திய அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்க இராணுவம்

வாஷிங்ரன், பெப் 18

உலகின் அதி நவீன அமெரிக்க இராணுவம் அடுத்த எட்டு ஆண்டுகளில் 48 ஆயிரத்து 200 கோடி டொலர் செலவில் மேலும் நவீனமயப்படுத்தப்படவுள்ளது என அதிபர் கிளின்ரன் தனது வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில்

### சமாதானம் வலியுறுத்தி

# சைக்கிளில் உலகம் சுற்றும் இந்தியன்

ராஜஸ்தான் மாநிலம்ஜய்ப்பூரைச் சேர்ந்தவர் ராஜகோபால் சவுகான். இவர் வன்முறைக்கு எதிராக, அமைதியான உலகம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தி சைக்கிளில் சுற்றுப் பயணம் தொடங்கி உள்ளார்.

இந்தப் பயணத்தை ராஜஸ்தான் ஆளுநர் அசு மின்சிங் தொடக்கி வைத்தார்.

இவர் ராஜஸ்தான்மாநிலத்தில் அரச ஊழியராக உள்ளார்.

தினமும் 80 முதல் 100 கிலோமீட்டர்வரை சைக்கிளில் பயணமாகிறார். இவர் 800 கிலோ மீட்டர்கள் பயணம் செய்து உத்தரபிரதேச மாநிலம் அலகபாத் வந்தார். அவருக்கு அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஐ-10)

# 800 பேர் ஆஸ்பத்திரியில்

கலப்பட உணவை உண்ட 800 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதாக பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் திங்கட்கிழமை தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

புதிய செம்பணி வீதி, கல்வியன்காட்டைச் சேர்ந்த நடராஜா விஜயகாந்தன் என்பவரது விசேட அடையாள அட்டை (0913037893) 08 - 02 – 99 இல் கல்வியன்காடு சந்தைக்கும் முந்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கல்வியன்காடு, தேநீர்ச்சாலை, (மாமா கடை) யில் ஒப்படைத்து உதவவும்.
(63186)

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராதாகிருஷ்ணர் என்பவரது விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டையும் (530032850X) யாழ்ப்பாணச் சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ அமலா நகை மாளிகை 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(63189)

உடுவிலைச் சேர்ந்த இராஜரட்ணம்சசிகுமார் என்பவரது விசேட அ. அ. [0906007798], தேசிய அ. அ. [760100706], பல்கலைக்கழக அ. அ. என்பன ஸ்ரான்லி வீதிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் 15-02-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்து உதவவும்.
(63181)

காரைநகர் சிவன்கோயிலடியைச் சேர்ந்த நாகரத்தினம் கலைமகள் என்பவருடைய விசேட அடையாள அட்டை (091300117) 12 — 02 — 99 அன்று சிந்தன்கேணிக்கும் மூளாய்க்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மூளாய் பிள்ளையார் கோயில் முன் உள்ள கி.ஏரம்பு என்பவரிடம் ஒப்படைத்து உதவவும்.
(63206)

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள இரும்பு அலுமாரி ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: T. செந்தூரன் 10, அம்மன் வீதி, கந்தர் மடம். (63132)

4 K V. டைனமோ நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு அம்பாள் பார்மஸி அன் குறோசறி இல. 1, நவீன சந்தை, சாவகச்சேரி. (63142)

நல்ல நிலையில் உள்ள கோழிக் கூடு விற்பனைக்கு உண்டு. 209, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (63183)


## கலைமகள்

கல்வி நிலையம்
K. K. S. வீதி,
கொக்குவில்.

எழுதுவினைஞர்
பரீட்சைக்கான
வகுப்புக்கள்
A/L 2000 – 2001
இற்கான
பொது உளச்சார்பு

ஆசிரியர்:
திரு. அ. குமாரவேல்
B A. (Hons)

செவ்வாய் } மாலை
வெள்ளி } 4 – 6மேணி

(63218)


## சுயதொழில் திட்டத்தின் கீழ்
# 35 பெண்களுக்குத் துணி வழங்கப்பட்டது

வலி. கிழக்கு, பெப். 18

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வழும் 35 பெண்களுக்கு சமூக சேவைத் திணைக்களத்தின் சுய தொழில் திட்டத்தின் கீழ் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிவகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இப்பெண்களுக்கு சமூக சேவைத் திணைக்களம் ஆளுக்கு ஒரு தையல் இயந்திரம் வீதம் 35 தையல் இயந்திரங்களை வழங்கியிருந்தது.

இவர்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும், பொருட்டு தற்போது துணி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களுக்குத் தேவையான தையல் உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் என். இராசலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-180-173)


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
சிங்களம்
SHORT HAND TYPING

ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 19 - 02 - 1999

(63215) - நிர்வாகி



ALL PURPOSE MULTI DIRECTIONAL
## KOBE-52
TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax: 437736
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589992

(சி/6492)


## கண்ணீர் அஞ்சலி

கலைவாணி கல்விநிலையத்தின் தன்னிகரில்லா விஞ்ஞானபாட ஆசான்

### இலகுப்பிள்ளை லோகேஸ்வரன்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
கலைவாணி கல்வி நிலையம்,
கோப்பாய் வடக்கு.

(63217)

சுதுமலை
## சிந்மய பாரதி வித்தியாலய
## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

21 - 02 - 99 (ஞாயிறு) மாலை 3-00 மணிக்கு (புதிய நேரம்) சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பாடசாலை புதிய மண்டபத்தில் நடைபெறும். சாதாரண அங்கத்தவர்கள் வருடச்சந்தா ரூபா 25 செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்தவும்.

★ உறுப்புரிமையுடைய அங்கத்தவர்கள் மாத்திரம் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.


திருமதி ஜெ. கிருஷ்ணசாமி, தலைவர் | ச. பொன்னம்பலம், செயலாளர்

(63222)

## கண்ணீர்ப் பூக்கள்

31 ஆம் நாள் நிறைவு | 9 ஆம் ஆண்டு நினைவு





அமரர்
### தம்பர் கிட்டிணர்
மண்ணில் 16 - 03 - 1924 | விண்ணில் 19 - 01 - 1999

அமரர்
### கிட்டிணர் அருமைத்துரை
மண்ணில் 28 - 06 - 1948 | விண்ணில் 16 - 12 - 1990

பாசமொடு பரிவுகொண்டெம் பக்கத்தி லிருந்தவும்மை
படம் வைத்து மாலையிட்டு பார்த்திருக்கும் பாவியானோம்
வானில் முகம்மலர்ந்த நிலவும் மறக்கலாம் — நறும்
தேன் மலரை நாட வண்டும் மறக்கலாம் — எம்
ஊனில் உணர்வில் உலவிடும் உம் நினைவுகளை தினம்
காணும் உளம்படைத்தோம் கடைசிவரை நினைந்திருப்போம்...
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
இலந்தைக்காடு, வல்வெட்டித்துறை.
(63211)

## இதய அஞ்சலி

வடக்கு–கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்
உயர்திரு. க. கந்தசாமி
அவர்களது பாசமிகு தந்தையார்
### அமரர் கணபதி

அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்.

வயாவிளான் ம. ம. வி,
உரும்பிராய்.

(63213)

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்
உயர்திரு. க. கந்தசாமி
அவர்களின் அன்புத் தந்தை
### அமரர் க. கணபதி

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண அதிபர்கள் சங்கம்.

க. சந்திரசேகரம், தலைவர். | ஆ. சி. நடராஜா, செயலாளர்.

(63214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு 879 மாணவர்கள் அனுமதி

## பட்டியல்கள் கிடைத்தன! பதிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழகத்தில் 998 / 1999ஆம் கல்வி ஆண்டில் தமது கல்வியைத் தொடர்வதற்கென 879 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்படி அனுமதி தொடர்பான விவரங்களை யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

- ★ கலை — 307 பேர்.
- ★ மருத்துவம் — 100பேர்.
- ★ வர்த்தகம் — 112 பேர்.
- ★ முகாமைத்துவம் — 126 பேர்.
- ★ உயிரியல் விஞ்ஞானம்— 53 பேர்.
- ★ பௌதிக விஞ்ஞானம்— 143 பேர்.
- ★ விவசாயம் — 37பேர்.

மேற்படி மாணவர்களில் மருத்துவம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், விவசாயம் ஆகிய கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற்றவர்கள் கடந்த 10 ஆம் திகதி முதல் தமது பதிவினை மேற்கொண்டு வருகின்றனர்.

கலைத்துறைக்கு அனுமதி பெற்றவர்களின் பெயர் விவரப்பட்டியல் நேற்று முன்தினமே கொழும்பில் இருந்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையினால் எடுத்து வரப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கலைத்துறைக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் எதிர் வரும் 24 ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் தமக்குரிய சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம் எனவும் —

திவு நடவடிக்கைகள் குறித்த தினங்களில் காலை 9:30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை (மதிய வேளை தவிர்ந்த) மேற்கொள்ளப்படும் எனவும்—

பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை அறிவித்துள்ளது. (ஐ-7)

# கூ. மொ. வி. கிளைகளில் அத்தியாவசிய பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

பருத்தித்துறை மற்றும் யாழ். கண்டிவீதியிலுள்ளகூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (ச. தொ.ச) கிளைகளில் மிளகாய் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் நேற்று முதல் பொதுமக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடாகி இருந்தது.

இதேவேளை —

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கிளையிலும் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து கப்பலில் இறக்கப்பட்டு யாழ். நகருக்கு கொண்டுவரப்பட்ட அரிசி, சீனி, செத்தல் மிளகாய், சன்லைட் சோப் போன்ற பொருள்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பருத்தித்துறை மற்றும் யாழ். கண்டி வீதிக் கிளைகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

கட்டுப்பாட்டு விலையில் இப்பொருள்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இதேவேளை —

அடுத்த சில தினங்களில் கொழும்பிலிருந்து மேலும் ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் மாகோ கப்பல் மூலம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-5]

# பயிற்சிப் பட்டறை

கோப்பாய், பெப். 18

கோப்பாய் சுகாதார வைத்தியசாலையில் 'சுகாதார வைத்திய பிரிவுகளுக்கான ஒன்றிணைந்த பங்கேற்புத் திட்டம்' தொடர்பாக பயிற்சிப்பட்டறை ஒன்று நடைபெற்று வருகின்றது. ஆறு நாள்கள் நடத்தப்படும் இப் பயிற்சி கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமானது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் நடத்தும் இப்பட்டறைக்கு டாக்டர் இந்திரராசா தலைமை வகிக்கிறார். [ஐ-72]

# நல்லூர்ப் பகுதியில் இரு வீதிகள் புனரமைப்பு

நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் அரியாலை, வண்ணார் பண்ணை ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வீதிகள் புனரமைப்புச்செய்யப்படவுள்ளன.

அரியாலைப் பகுதியில் உள்ள இளையதம்பி வீதி வண்ணார் பண்ணையில் உள்ள சிவப்பிரகாசம் வீதி, என்பனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி இரு வீதிகளையும் திருத்துவதற்கு முறையே நல்லூர்ப் பிரதேச சபையும் யாழ். மாநகரசபையும் சிபார்சுசெய்துள்ளன. (இ-7)

# பெண்கள் தினப் போட்டிகள்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் அனைத்துலகப் பெண்கள் தினப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் தரம் 11, தரம் 12 பாடசாலை மாணவிகளுக்கான பேச்சுப் போட்டிகள் பெண்களின் பொதுப் பணியும் சமூகக் கணிப்பும் என்ற தலைப்பிலும் —

மகளிர் அங்கத்தவர்களுக்கான போட்டியில் கூட்டுறவில் மகளிர் பிரவேசமும் தடையும் என்ற தலைப்பிலும் இடம் பெறும்.

விண்ணப்பங்களை எதிர் வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-4)


## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
காரைநகர்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், இயக்குநர் சபை உறுப்பினரும், வலிகாமம் மேற்குப்பிரதேச செயலக செயலாளருமாகிய

### கனகசபை திரவியம்

அவர்கள் 15—02—99 இல் அகால மரணமடைந்த செய்தியைக் கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். இவ்வேளை துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபையினரும்,
பணியாளர்களும்.

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர். (63208)

ஸ்ரீ சக்தியே நம

## வாழ்த்துகின்றோம்

உபநயன பிரம்மோபதேசம்

பிரம்மஸ்ரீ ஸ்ரீஸ்காந்தக் குருக்கள்
தம்பதியரின் தவப்புதல்வர்களே
**சசிகாந் சர்மா**
**பிரசாந் சர்மா**

நீங்கள் இருவரும் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. தாயில் சிறந்ததொரு கோவிலுமில்லை என்பதைப் போல் தலை சிறந்த தந்தையின் நற்குணங்களுக்கு இணங்க நீங்கள் இருவரும் உபநயன அனுஸ்டானம் பெற்று பண்புடனும், பணிவுடனும் தாய், தந்தை, பாட்டியின் அறிவுடனும் எங்களின் ஆசியுடனும் குருவின் ஆசீர்வாதத்துடனும் பல கலைகளைக் கற்றவர்களாகவும், வேதாகமங்களை நிறைவுறக் கற்று இருவரும் சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு காலம் சிரஞ்சீவிகளாக பெருமையுடன் வாழ்வீர்களாக என்று வாழ்த்துகின்றோம்.

இந்திரன் ஐயர், ரவீந்திரன் ஐயர்,
கோண்டாவில் கிழக்கு
(63174)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 — 09 — 1944



மறைவு 19 — 01 — 1999

அமரர்
### செல்வராசா செல்வலிங்கம்
(கிராம அலுவலர் — அல்வாய் வடமேற்கு)

திங்களொன்று எமைப்பிரிந்து திடீரெனவே
சென்றதையா;
நேம்பியமும் எமைப்பிரிந்து தெய்வபதம்
சென்றடைந்த
வெங்கொடு . ம எமைப்பிரிந்து விலகும் நாள்
யாமறியோம்.
விண்ணுல கோருமுந்தன் விரக்திகண்டு
தாம்வியப்பர்;
எங்களின் நிலையினைஉம் இருவிழியிற் கண்டழுவர்;
ஏற்ற முறும் எமைக்காணும் எதிர்பார்ப்பைக்
கண்டிடுவர்.
சங்கரனின் தலைமகன் சாமணந்த றைப்பெருமான்
தாள்பணிந்து நாமுயர்வோம் சாந்திபெற்
றுறங்குவீரே!

அன்னாரது இல்லத்தில் இன்று (1999 02 18) வியாழக்கிழமை காலை 5 30 மணி தொடக்கம் 8.00 மணிவரை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

'மலர் மஹால்'
அல்வாய். (63210)

மத்தியின் மணிவிளக்கு மறைந்து
## நான்காண்டு

பிறப்பு 23 — 10 — 1975



இறப்பு 18 — 02 — 1995

மணிக்குரலின் S. மணிவதனன்
ஞாபகார்த்த கிறிக்கற் சுற்றுப் போட்டியில்
இன்று மோதும் அணிகள்
மாலை 2.00 மணிக்கு
சென்ரலைற் சொக்ஸ் எதிர் அரியாலை வி. க.
KCCC எதிர் மல்லாகம் RDS

21 ஆம் திகதி கால், அரை, இறுதி ஆட்டங்களும்,
28 ஆம் திகதி காலை இறுதியாட்டமும் இடம்பெறும்.
28 ஆம் திகதி மாலை 1.30 மணிக்கு மாபெரும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

மங்கள விளக்கேற்றல் து. இராஜதுரை.
(அதிபர், யாழ். மத்திய கல்லூரி)
Dr. றெஜி சொலமன்
(லாவண்யா)

மணி வீடியோ ஆதரவில்: கராட்டி.
மக்சல் ஹவுஸ், புதிய சந்திரா ஆதரவில்:
தேன் இசை மழை
பரிமளா ஸ்ரோர்ஸ், ஆசிகா சில்க்ஸ் ஆதரவில்
சாரங்கா இசைக் குழுவினர் வழங்கும்
சோக மேகமும், ராஜராகமும்
திரை இசை நிகழ்ச்சி
தொகுப்பு: மணிக்குரல் V S. சற்குணன்
S சிவாணி
(யாழ். ப. கழகம்)

இடம்: யாழ். மத்தியகல்லூரி கலை அரங்கு
அனைவரும் வருக! அரிய நிகழ்ச்சி காண்க!

விளம்பர அன்பளிப்பு;
வி. எஸ். பி. ஸ்பெஷல் லஞ்ச ஒயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[63177]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1908 — 02 — 27

விண்ணில் 1998 — 02 — 18

# திருமதி தங்கம்மா சதாசிவம்பிள்ளை

(சிவசம்பு)

திதி: 1999 — 03 — 09

அன்பு ததும்பும் முகம் கண்டு ஆறிரு
திங்கள் ஆனதம்மா
என்புத் தசையும் தந்துலகில் — எமை
வாழவைத்தாய் தெய்வமே!
பண்பும் பரிவும் பாசமும் ஒருங்கே
தங்க (ம்) மனங்கொண்ட தயாபரியே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஆடியம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கி க்கு,
சாவகச்சேரி.

(63045)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

# சுவாம்பிள்ளை அருளானந்தம்

மண்ணில் 12 — 10 — 1926

விண்ணில் 19 — 01 — 1999

ஆதாரமாய் எமையணைத்து
அனைவரையும் வாழவைத்து
மாதாவை அலங்கரித்த
மாண்புடைய ஐயா!
மேதாவியாய் உலாவந்து
முத்துக்களாய்ச் சொரிந்திட்ட
ஆதார வார்த்தைகளே உடுவிலில்
அருள் ஆனந்தமாய் வளர்கிறது ......

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்முடன் வாழ்ந்து, எம் வாழ்வைச் சிறப்பித்து எங்கள் அனைவரையும் பேணி வளர்த்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், எமது தந்தையாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் ஓடோடி வந்தும், தபால், தந்தி மூலம் ஆறுதலும், அனுதாபமும் தெரிவித்தும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலிகளைப் பிரசுரித்தும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியும், பல்வேறு உதவிகளையும் நல்கிய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 18-02-1999 வியாழக்கிழமை 11-30 மணிக்கு (புதிய நேரம்) உடுவில் புனித செபமாலை மாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரின் நினைவுகளில் வாழும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

08, ஆக்லேன், உடுவில்.

(63192)

## நெடுந்தீவில் தரமான மீன் விற்பனைக்கு

நெடுந்தீவு, பெப். 18

மீனை வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டதை அடுத்து நெடுந்தீவு மீன் சந்தையில் தற்போது தரமான மீன் வகைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

வெளி இடங்களில் விற்பனை செய்வதற்காக மீன் வியாபாரிகள் தரமான மீன்களை எடுத்துச் சென்று விடுவதால் பாவனையாளர்களுக்கு நல்ல மீன் கிடைப்பதில்லை எனவும்—

விற்பனைக்காக வெளி இடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட வேண்டும் எனவும்—

உதவி அரசாங்க அதிபரிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து தற்காலிகமாக இந்தத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தெரிவித்தார். (இ-111)

## சூட்டுக் காயத்துடன் சடலம்

வாழைச்சேனை கிண்ணியடிப் பகுதியில் ஞாயிறன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் ஒருவரின் சடலம் படையினரால் கடந்த திங்களன்று வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சின்னத்தம்பி விஜயகுமார் (வயது 30) என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஐ 6 - 21)

## கூட்டுறவு சமாசம் கடன்

யாழ்ப்பாணம் பெப். 18

சிறிய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் கிராமிய வங்கிகள் ஊடாக ரூபா 5 ஆயிரம் முதல் ரூபா 50 ஆயிரம் வரை கடன் வழங்குவதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கடன்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் தமதுபகுதியிலுள்ள கூட்டுறவுக்கிராமிய வங்கிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் (இ-5)

## யுவதி கைது

யாழ்ப்பாணம், பெப். 18

முறை தவறிய தொடர்பு மூலம் தமக்குப் பிறந்ததாகக் கருதப்படும் சிசுவை கொலை செய்து புதைத்ததாகக் கூறப்படும் 15 வயது யுவதி ஒருவரை இளவாலைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்துக்கு நேற்று முன்தினம் பொலீஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத்தொடர்ந்து புதைக்கப்பட்ட குழந்தையின் சடலத்தைத் தோண்டி எடுக்குமாறும்—

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-5)

## பன்னிரு திருமுறை ஓதுதல்

யாழ்ப்பாணம், பெப். 18

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில் நாளாந்தம் மாலை 5 மணி தொடக்கம் பன்னிரு திருமுறை ஓதுதல் நடைபெற்று வருகிறது.

பண்டிதர் கார்த்திகேசு (சேந்தன்) பாராயணக் குழுவினர் பன்னிரு திருமுறை ஓதுதலை தைப்பூசத் தினத்தன்று ஆரம்பித்துத் தொடர்ந்து ஓதி வருகின்றனர். (அ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை உதவி ஆசிரியர்
திரு. செ. உட்ஜெயலிங்கம்
**அவர்களின் சகோதரர்**
அமரர்

# செல்வராசா செல்வலிங்கம்

(கிராமசேவையாளர், அல்வாய் வடமேற்கு)

அவர்களின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
கிளி/கிளாலி றோ. க. த. க. பாடசாலை.

(63113)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் பதவி வெற்றிடங்கள்

### ஒப்பந்த அடிப்படையில் நிரப்புதல்

பின்வரும் பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**

1. சுகாதாரத் தொழிலாளி (நகர்ச் சுத்திகரிப்பு)
2. சுகாதாரத் தொழிலாளி (மலகூட சேவை)
3. சந்தைத் தொழிலாளி
4. வீதித் தொழிலாளி
5. சாரதி

**தகைமைகள்**

1. வதிவிடத் தகைமை:
   நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிப்பதுடன், இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை:
   18 வயதிற்குக் குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. கல்வித் தகைமை
   ஆகக்குறைந்தது 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 23 - 02 - 1999 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக, 'தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. விசயரட்ணம்,
**தலைவர்.**
**நகராட்சி மன்றம், பருத்தித்துறை**

நகராட்சி மன்ற அலுவலகம்.

(சி/6525)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 17 — 01 — 1982

ஆண்டவன் அடியில் 27 — 02 — 1998

# அண்ணாமலை தர்மலோஜினி

திதி: பூர்வபட்ச துதியை 18 — 02 — 99

மணமாலை சூடி உன் அழகைப் பார்க்குமுன்னே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொள்ளும் எமது
அன்புத் தெய்வமே! நீ
இறைவனடியில் சாந்தி அடைந்துவிட்டாய்
எங்கள் மனங்களோ சாந்தியடையவில்லை!
உன் இனிய நினைவுகள் எம்
நெஞ்சங்களில் நீங்காது என்றும்
நிலைத்து இருக்கும்.

உன் பிரிவால் துயருடன் கலங்கித் தவிக்கும்...

**அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அத்தான்மார், அண்ணன்மார், அண்ணி, தம்பிமார், தங்கைமார், பெறாமக்கள்: உற்றார், உறவினர், நண்பர்கள்.**

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(63207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபார நோக்கத்தில் கண்டபடி பனைகளைத் தறிப்பது தடுக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 18

இயற்கை அன்னையின் கொடையாக விளங்குவதும்— யாழ். குடாநாட்டின் கற்பக தருவானதுமான பனை மரங்களைக் கண்டபடி வியாபார நோக்கில் தறிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் விடுத்த பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தற்போது யாழ்ப்பாணத்திலும் மற்றும் ஏனைய இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்த நடவடிக்கைக்கு பனம் மரங்கள் அவசியம் ஆகின்றது. இடம்பெயர்ந்து அனைவரும் மீள் குடியேறும் போது இப்பனை மரங்களின் தேவை பல மடங்கு அதிகமாகத் தேவைப்படப்போகின்றது.

இதுவரையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் யுத்த சூழ்நிலையால் வதிவிடங்கள் மற்றும் ஏனைய கட்டடங்கள் அழிந்து விட்டமையால் இவற்றை மீள் புனரமைக்கும் போதும், புதிய கட்டடங்கள் அமைக்கும் போதும், அதிகளவு மரங்கள் தேவைப்படுகின்றன. அத்துடன் யுத்த நிலை காரணமாக இன்னோரன்ன காரணங்களால் அதிகளவு பனை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன: அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பனை மரத்தைத் தறித்தல் என்பது ஓர் இலகுவான காரியம். இதனை நட்டு, மரமாக்குவதற்கு 15 ஆண்டுகள் தேவைப்படுகின்றது. இதனை முதலில் அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கான பிரச்சாரத்திலும் பனை அபிவிருத்திச் சபையும் ஈடுபட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இப்பிரச்சார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும், தேவையான வேறு நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானித்துள்ளது.

இதனை ஈடுசெய்யும் முகமாக பனை அபிவிருத்திச் சபையும் யு. என். டி. பி யும் இணைந்து 1998 ஆம் ஆண்டில் 5½ இலட்சம் பனம் விதைகளையும், வேம்பு, தேக்கு போன்ற ஏனைய மரங்களையும் நாட்டியுள்ளோம். அத்துடன் நான்கு மாதிரிப் பனந்தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மரம் தறித்தல்

பனை மரம் தறித்தல் நடவடிக்கையை உண்மையில் தடுத்து விடமுடியாது. மரத்தேவை, நிலத்தேவை உள்ளன என்பதை நாம் அறிவோம். இதற்குத் தடையாக இராது. உண்மையில் தேவை என்பதை உறுதிப்படுத்தி தறிக்க வேண்டிய பனை மரத்தினை இனங்கண்டு தறிப்பதையே விரும்புகின்றோம். இதற்கேற்றவாறு சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் உள்ளோம். கண்டபடி வியாபார நோக்கில் தறிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

எமது சிபார்சுடனே பனம் மரங்கள் தறிக்கப்படுவதை அனுமதிக்குமாறு அரசாங்க அதிபருடனும், மற்றும் உதவி அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொண்டு கேட்டுள்ளோம்.

### பனை மரக்காலை

பனை மரம் சார் விற்பனை நிலையம் ஒன்றினை அமைத்தல், உண்மையில் தறிக்கப்பட வேண்டிய சரியான பனை மரங்களை இனங் கண்டு அவற்றினைத் தறித்து விட்டு வேலைக்கான மர விநியோகத்தைச் செய்தல், அத்துடன் எஞ்சிய பகுதி மூலம் பனை மரத்திலான ஏனைய தளபாடம் மற்றும் அலங்காரப் பொருள்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் எமது நோக்கம்.

பனை மரத்தில் உற்பத்தி செய்யப்படும் அலங்காரப் பொருள்களும், யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் நல்ல கிராக்கி உள்ளதை என்னால் அவதானிக்க முடிகிறது. ஓர் ஏற்றுமதிச் சந்தை வாய்ப்பையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இம்மர உற்பத்திகள் மேற்கொள்வதற்கான தொழிற் பட்டறை ஒன்றை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் கூடிய விரைவில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதாக அறியத்தந்துள்ளார். தற்போது இது கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளது.

முக்கிய நிதி வழங்கும் நிறுவனங்களான யு. என். எச். சி. ஆர், யு. என். டி. பி ஆகிய இரு நிறுவனங்களுடன் இணைந்து 04 திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இதனுடைய வெற்றிகரமான நிறைவேற்றுதலைக் கருத்திற் கொண்டு மேலும் பெரிய அளவிலான நிதி உதவியினை வழங்குவதாக இவர்கள் கூறியுள்ளார்கள்.

பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் இதுவரையும், தற்போதும் தறிக்கப்படும் பனம் மரங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதைத் தவிர கண்டபடி தறிக்கப்படுகின்ற பனை வளத்தைக் கட்டுப்படுத்தி ஓர் ஒழுங்கு முறைக்குக் கொண்டு வருவதே எமது முதலாவது நோக்கமாகும்—

என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## உதயன்

### மூன்றாவது ஆயுதம்!

அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் விரும்பிய மாத்திரத்தே, தாம் நினைத்தது போல தமிழர்களைத் தொல்லைப்படுத்துவதற்கும், இம்சைப்படுத்துவதற்கும், ஒடுக்குவதற்கும், கொடுமைப் படுத்துவதற்கும் இரண்டு கைகளிலும் இரண்டு சட்ட ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்.

உள்நாட்டில் வாழும் தமிழரை மட்டும் அடக்குமுறைக்கு உட்படுத்தவே அவை உதவும் என்பதால், வெளிநாடுகளில் வசித்து விட்டு வரும் தமிழர்களையும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு வசிக்கச் செல்வோரையும் தாக்கித் துன்புறுத்துவதற்குப் புதிதாக மூன்றாவது சட்ட ஆயுதம் ஒன்றை அரசாங்கம் ஏந்தியுள்ளது!

கடந்த வருடத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டகுடிவருவோர் குடியகல்வோர் திருத்தச் சட்டமே அந்த மூன்றாவது சட்ட ஆயுதமாகும்.

இந்தச்சட்டம் எத்துணை கொடுமையானது, நீதிவரன்முறைகளுக்கு முரணானது, மனிதாபிமானத்துக்குப் புறம்பானது, மனித உரிமைகளை மீறுவது என்பதனை, சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சட்டத்தினால் நூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும்யுவதிகளும் 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தியதோடு சேர்த்து ஒரு வருடச் சிறைத்தண்டனையையும் அனுபவித்து இன்னற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழ் பிணை எடுப்பதற்கு முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி விதிக்கப்பட்ட தண்டனையை மீளாய்வு செய்யுமாறோ அல்லது அதனை எதிர்த்தோ விண்ணப்பிக்க முடியாதவாறு அடக்குமுறைப் பூட்டுப் போடப்பட்டிருக்கிறது!

ஜனநாயக நாடு எதிலும் ஒருவர் தமக்கு எதிரான மரண தண்டனையைக் கூட எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்ய உரிமை உண்டு. பொதுவாகவே எல்லா நாடுகளின் சட்டங்களிலும் சந்தேக நபர் ஒருவரை நீதிபதி தமது விருப்புரிமையின் பிரகாரம் பிணையில் செல்ல அனுமதிப்பதற்குச் சட்ட வசதி உண்டு.

ஆனால் முன்னர் குறிப்பிட்ட குடிவருவோர் குடியகல்வோர் திருத்தச் சட்டத்தில் மேற்சொன்ன இரண்டும் மறுக்கப்பட்டுள்ளன. இது முழுக்க முழுக்கக் கொடுங்கோன்மையானது; நீதிக்கு முரணானது, மக்களின் நீதிகோரும் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதும் ஆகும்.

புதிய சட்டத்தின் கொடூரம் இப்போது சிங்கள மக்களைத் தாக்காமல் இருக்கலாம். காலப்போக்கில் இச் சட்டம் அவர்கள் மீதும் அநீதி என்ற தீ நாக்கை நீட்டும் என்பது நிச்சயம்.

அது தம்மைச் சுடும் வரை காத்திருக்காது இப்போதே புதியசட்ட விதியை நீக்குவதற்கு அவர்கள் தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் குரல் ஒலிக்க வேண்டும்.

## நல்லூர்ப் பிரதேசத்தில் வீதிகளைத் திருத்தத் தார்

வலி. கிழக்கு, பெப். 18

நல்லூர்ப் பிரதேச சபைக் குட்பட்ட வீதித் திருத்த வேலைகளுக்காக நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர்தார் வந்துசேர்ந்துள்ளது

இப் பிரதேசத்திற்குட்பட்ட பல வீதிகள் தார் இல்லாததால் முழுமையாகப் பூர்த்தி செய்யாமலும், பல வீதிகள் திருத்தப்படாமலும் இருந்தன.

கடந்த வாரம் இப்பிரதேச சபைக்கு 100 தார் பரல்கள் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து வீதிகள் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளதாகப் பிரதேசசபை செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-180)


## நீர்வேலியில் செயற்படும் உப்பு பொதி செய்யும் நிலையத்தில் வசதியீனம்

கோப்பாய், பெப். 18

நீர்வேலியில் அமைந்துள்ள அயடீன் கலந்த உப்பு பொதி செய்யும் தொழிற்சாலை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

இத் தொழிற்சாலையில் உப்பு சுத்திகரித்து பொதிகளில் அடைக்கப்பட்டு வருகின்றது. இங்கு தொழில் புரியும் பணியாளர்கள் காற்றோட்ட வசதி அற்ற மூடிய கட்டடத்திலே பணியாற்றுவதனால் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

(ஐ-72)


## சாயி சிந்தனை

இப்போது நாம் வாயைத் திறக்கிறோம். இதயத்தை மூடிக்கொள்கிறோம். வெறும் பேச்சால், நமது நேரத்தை வீணடிக்கிறோம். இது நல்ல வாழ்க்கையில்லை. சொற்களைவிட இதயம் மிகுந்த மதிப்புடையது. முயற்சி செய்து, இதயத்தின் கதவுகளைத் திற, இதற்கு ஆன்மீகப்பயிற்சி (சாதனை) எதுவும் தேவையில்லை. தேகம், தெய்வத்தின் ஆலயம். இறைவன் நமது இதயத்தில் உறைகின்றார். இதை வளர்த்து, போஷியுங்கள். உடலை உதாசீனம் செய்வது சரியல்ல. உடல் பலவீனமாக இருக்கும்போது, மனமும் பலவீனமாகிறது. புலன்கள், மனம், புத்தி, சித்தம் அனைத்தும் பலவீனமாகி விடுகின்றன. அமைதி பெறுவதற்கு, அவற்றை ஆரோக்கிய நிலையில் வைத்திருங்கள்.

[ஆதாரம்: சாயி அருளமுதம்]

## நோயாளர் பாதிப்பு

அனலைதீவில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றுள்ளதால் அங்குள்ள நோயாளர்கள் சிறிய நோய்களுக்கு மருந்து எடுக்கவும் ஊர்காவற்றுறைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதேவேளை எழுவைதீவில் மருத்துவ மாது ஒருவர் இன்மையால் கர்ப்பிணித்தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக எழுவைதீவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தீவுப்பகுதியில் தற்சமயம் ஊர்காவற்றுறை, நயினாதீவு, நெடுந்தீவு வைத்திய சாலைகளில் மட்டுமே வைத்திய அதிகாரிகள் மூவர்கடமையில் உள்ளனர்.

(ஐ-111)

## பயிற்சி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறி இன்று வியாழக்கிழமை யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆறுமாத காலம் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் மகளிருக்குத் தையல், கோலம் போடுதல், முக ஒப்பனை, வர்ணம் தீட்டுதல், பூவேலை ஆகிய பல்வேறு பயிற்சிகள்நடத்தப்படவுள்ளன.

(ஐ-135)

## நாளை

மாசி 07

வெள்ளிக்கிழமை

திதி: திருதியை முற்பகல் 8.51 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி பிற்பகல் 4.26 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 6.32- 8.02

ராகுகாலம்: 11 02-12 32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## துவக்காலச் சிந்தனை - 2

''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள் தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வர். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?''

இன்று பலர் நடைப்பிணங்களாக சொத்து, சுகம், பணம் என அலைந்து தம் உறவுகளை, உணர்வுகளை, நிம்மதியை இழந்தவராக பொருளுக்கு காவல் காப்போரும், பொருளுக்காக அலைவோரும், பொருளாலே தனிமைப்பட்டோராய் உடலுள உபாதைக்கு உட்பட்டோராய் வாழ்வதைக் காண்கின்றோம். பொருள் மட்டும் நிம்மதியைத் தந்துவிடாது. தன் ஆன்மாவை இழந்து விட்டவன் வாழ்வாக மாறிவிடாமல் ஆன்மாவைக் காப்பதில் மிக நிதானமாகச் சிந்திக்கவும், துன்பத்தைத் தாங்குபவனுக்கே இன்பத்தின் சுவை புரியும், இறை அன்பைத் தேடுபவனுக்கே மனித உறவையும் புரிந்துகொள்ளமுடியும். வாழ்வின் சிலுவைகளை தூக்கும் மனப்பக்குவத்தைத் தாங்கும்பொருட்டு பயணத்தைத் தொடருங்கள்.

யோசப்பாலா

## உதய வாக்கு

மனம் மாசு இல்லாமல் தூய்மையடைந்தால் துன்பமே இல்லாத பூரண ஆனந்தம் வாய்க்கும்.

- ஸ்ரீ ராமபிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிர்ணய விலைகள் மீறல் ஏன்?

அரியாலை, பெப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலாக பொருள்களை விற்பனை செய்து வருவதாகப் பாவனையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு சமாசத்தால் வழங்கப்பட்ட பொருள்களைக் கூட நிர்ணய விலைக்கு மேலாக அதிகரித்து விற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சோடி ரோர்ச் பற்றரியின் ஆகக் கூடிய நிர்ணய விலை 14 ரூபாவாகும். ஆனால் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றரியை சோடி 50 ரூபாவாக விற்பனை செய்து வருகிறது.

அத்துடன் ஒரு தீப்பெட்டியின் நிர்ணய விலை ஒரு ரூபா 50 சதமாகும். ஆனால் அதை இரண்டு ரூபாவாகக் கூட்டி விற்பதாகக் கூறப்படுகிறது.

சீனியின் நிர்ணய விலை கிலோ 30 ரூபாவாகும். ஆனால் 32 ரூபா முதல் 34 ரூபாவாக விநியோகிக்கப்படுகிறது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நிவாரண விநியோகத்தின் போது பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் சீனி மற்றும் பொருள்களைப் பொதுமக்களுக்கு வழங்கக் கிளை முகாமையாளர்கள் பின்னடித்து வருவதாகவும் மக்கள் மத்தியில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

## செயலமர்வு

நல்லூர், பெப். 18

உள்ளூரில் காணப்படும் மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுப் பொருள்கள் தயாரிக்கும் செயலமர்வும் —

பாலர் கல்வி ஆசிரியர்களுக்கான குழந்தை அரங்கு பயிற்சிப்பட்டறையும் —

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினதும் 'யுனிசெவ்' நிறுவனத்தினதும் உதவியுடன் விரைவில் நடைபெறவுள்ளன. (ஐ-193)

## 130 பட்டதாரிகளின் சான்றிதழ் விவரம்

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக்கடந்த வருடம் மே மாதம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தமது பட்டதாரிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி குறித்த விவரங்களைச் சிலர் சமர்ப்பிக்கவில்லை. அந்த வகையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 130 பட்டதாரிகள் குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட வலயக் கல்வித் திணைக்களத்தில் உடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக ஒவ்வொரு பட்டதாரிகளுக்கும் தனித்தனியே கடிதம் மூலமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 உபதபாலகங்களுக்குரிய முத்திரைகள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

சுன்னாகம், தெல்லிப்பழை, நயினாதீவு, கொடிகாமம், சங்கானை, பளை, கைதடி, கோப்பாய், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, அச்சுவேலி, மானிப்பாய், காரைநகர், பருத்தித்துறை, பண்டத்தரிப்பு ஆகிய உபதபாலகங்களுக்கான முத்திரைகளே எடுத்து வரப்பட்டன.

இவ்வாறு எடுத்து வரப்பட்ட முத்திரைகளும் புதிய ரூபா 3.50 சத பெறுமதியான முத்திரைகளும் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 18

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம. மகாதேவா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையாவும், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கமும், வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க)

# சைவத்தின் மீது பற்றுள்ளவர்கள் காரைநகர் வாழ் மக்கள்

## மணிவாசகர்சபை விழாவில் பாராட்டு

காரைநகர், ஜன 17

சைவ உலகுக்கு என்னை அர்ப்பணித்து சேவையாற்றுவதற்கு கால்கோளாக அமைந்த காரைநகரையும், ஈழத்துச் சிதம்பரத்தையும் எனது வாழ்வில் என்றுமே மறக்க முடியாது. காரைநகர் மக்கள் சைவத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவர்கள்.

காரைநகர் மணிவாசகர் சபையின் 44 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு அண்மையில் காரைநகர் சிவன் தேவஸ்தான வசந்த மண்டபத்தில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:—

சிவத்தமிழ்ச் செல்வி என்ற பட்டத்தை காரைநகர் மக்களும், ஈழத்துச் சிதம்பர நிர்வாகத்தினருமே எனக்கு முதலில் வழங்கிக் கௌரவித்தனர். எத்தனையோ பட்டங்கள் கிடைக்கப் பெற்றாலும் சிவத்தமிழ்ச் செல்வி என்றே அனைவரும் என்னை அழைக்கின்றார்கள்.

காரைநகர் மக்கள் சைவத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவர்கள் என்பதுடன் சிவனடியார்களையும் மதிக்கும் பண்புடையவர்கள். நான் சமயப் பிரசங்கங்கள் ஆற்றுவதற்கு வேறுநாடுகளுக்குச் சென்றபோதெல்லாம் அங்கிருந்த காரைநகர் மக்கள் மிகுந்த உதவிகளை வழங்கினர் என்றார்.

இந்த நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆசிரியர் ஆறு. திருமுருகன் ''தெய்வம் என்பதோர் சித்தம்'' என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை அதிகாரி க. பாலசுப்பிரமணியம், ஓய்வுபெற்ற அதிபர் க. தில்லையம்பலம், பண்டிதர் மு. சு. வேலாயுதம்பிள்ளை ஆகியோர் சிவத்தமிழ்ச்செல்வியைப்பாராட்டி உரையாற்றினர்.

காரைநகர் சிவன் தேவஸ்தானமகாகும்பாபிஷேகத்தையொட்டி நடத்தப்பட்ட திருவாசக மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, சைவசமயப் பாடப் பரீட்சை ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்கினார்.

ஆலய அறங்காவலரின் மனைவி திருமதி செல்வநாயகி சுந்தரலிங்கம் சிவத்தமிழ்ச் செல்விக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

(இ-ரீ-8)

## 3 நாடுகள் பங்குபற்றும் ரெஸ்ட் கிரிக்கெட் ஆரம்பம்

கொழும்பு, பெப். 18

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பங்குபற்றும் மும்முனை ரெஸ்ட் போட்டித் தொடர் நேற்று முன்தினம் கல்கத்தாவில் ஆரம்பமாகியது.

இந்தியாவும், பாகிஸ்தானும் பங்குபற்றிய அந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 185 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

அதன்பின் ஆடிய இந்திய அணி ஆட்ட முடிவில் ஒரு விக்கட்டை இழந்து 26 ஓட்டங்களைப்பெற்றது.

மூன்று நாடுகள் பங்குபற்றும் ரெஸ்ட் சுற்றுப்போட்டி முதல் தடவையாக நடைபெறுகின்றது.

இந்தப் போட்டி கல்கத்தா, கொழும்பு, லாகூர், டாக்கா ஆகிய இடங்களில் நடைபெறும்.

போட்டிகளில் வழங்கப்படும் புள்ளி அடிப்படையில் இறுதிப்போட்டிக்கு அணிகள் தெரிவாகும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் போட்டி நடைபெறும் திகதி, இடங்கள் விவரம் வருமாறு—

★ இந்தியா எதிர் பாகிஸ்தான். நேற்று முன்தினம்முதல் 20 ஆம் திகதி வரை கல்கத்தாவில்.

★ இந்தியா எதிர் இலங்கை பெப். 24 முதல் 28 வரை கொழும்பில்.

★ இலங்கை எதிர் பாகிஸ்தான் மார்ச் 4 முதல் 8 வரை லாகூரில்.

★ இறுதிப்போட்டி மார்ச் 12முதல் 16 வரை டாக்காவில். (இ-3)

# செய்திக் கொத்து

### வீதி பழுதடைந்த சேதம்

சண்டிலிப்பாய், பெப். 18

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து பிரான்பற்று ஊடாக சண்டிலிப்பாய்க்கு செல்லும் பிரதான வீதி குண்டுங் குழியுமாக போக்குவரத்திற்கு சிரமமான நிலையில் உள்ளது. இதனால் இவ் வீதி வழியாகப் பிரயாணம் செய்பவர்கள் மிகுந்த சஷ்டமடைகின்றனர்.

(ஐ - 135)

### விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

நெடுந்தீவு, பெப். 18

வேலணையில் உள்ள கமநல சேவைகள் நிலையம் இருபது நீர் இறைக்கும் இயந்திரங்களை கடன் அடிப்படையில் இங்குள்ள விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. (ஐ 111)

### வைத்திய அதிகாரி இல்லை

காரைநகர், பெப். 18

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் பதில் வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாமையினால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி எஸ். அம்பிகைபாகன் தற்பொழுது கொழும்பு சென்றுள்ளதால் இவரது இடத்திற்கு இதுவரையும் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் இங்குள்ள நோயாளர்கள் தமது சிகிச்சைக்காக நீண்ட தூரம் செல்லவேண்டிய நிலையிலுள்ளனர். (ஐ-5)

### கட்டடம் புனரமைப்பு

கோண்டாவில், பெப். 18

நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலக கட்டடம் புனரமைக்கப்படுகிறது. ஷெல் வீச்சினால் உடைந்த சுவரின் பகுதிகள் திருத்தப்பட்டு வர்ணம் தீட்டப்படுகிறது.

(ஐ-ரீ)

### கிராம அலுவலர் இடமாற்றம்

வடமராட்சி, பெப். 18

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய ந. தங்கத்துரை உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கும், ந. குமரகுருபரன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-173)

### மாடுகளுக்கு குறி சுட ஏற்பாடு

வடமராட்சி, பெப். 18

கரவெட்டிப் பகுதியில் மாடுகள் காணாமற் போவது அதிகரித்துள்ளது.

மாடுகள் திருடப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் இப்பகுதியில் உள்ள மாடுகளுக்கு குறி சுடப்படவுள்ளது.

மாடுகள் திருட்டுத் தொடர்பாக பொதுமக்கள் தெரிவித்த புகாரைத் தொடர்ந்து மாடுகளுக்கு குறிசுடும் நடவடிக்கைகளை கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் எடுத்துள்ளார்.

மாடுகளுக்கு குறிசுடும் நடவடிக்கைகளுக்குபொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

### ஐ. நா. அபிவிருத்தி பங்கேற்பு கிராமிய பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணத்தில் மீள் குடியமர்வு புனரமைத்தல் நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்குடன் ஐ நா. அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒன்றான பங்கேற்பு கிராமிய அணுகுமுறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டம் பூர்த்தியடைந்துள்ளதாக மேற்படி நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பயிற்சிக்கென 26பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ஐ-5)

### சேவைக்காலப் பயிற்சி

வலிகாமம் தெற்கு, பெப். 18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 7 ஆம், 8 ஆம் தரங்களில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஐ-152)

### "சஜிந்த" கப்பல் பருத்தித்துறையில்

வடமாட்சி, பெப். 18

பருத்தித்துறை துறைமுகத்தில் ''சஜிந்த' கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும்பணி நடைபெற்று வருகிறது.

இக்கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருள்களும், சுமார் 2 ஆயிரம் சிமெந்துப் பக்கற்றுக்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஐ-173)

### 55 ஆயிரம் மரமுந்திரிகை விதைகள்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். குடாநாட்டில் மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் 55 ஆயிரம் முந்திரிகை விதைகளை அனுப்பி வைத்துள்ளது.

திருநெல்வேலி, வேலணை மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நாற்றுமேடைகளில் மேற்படி விதைகள் தற்போது நடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

### ஓய்வு பெற்றார்

வடமாட்சி, பெப். 18

வல்வெட்டி கிராம சேவை அலுவலர் பொ. சின்னத்தம்பி 35 வருட சேவைக்குப் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார்.

இதனையடுத்து வல்வெட்டிக்கான பதில் கிராம அலுவலராக கே. கணேஸ் கரவெட்டி பிரதேச செயலரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-173)

### பாலர் விடுதி புனரமைப்பு

கோப்பாய், பெப். 18

கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள பாலர் பகல் விடுதிபுனரமைக்கப்பட்டுள்ளது.

78 ஆயிரம் ரூபா நிதியை சமூக சேவைகள் அமைச்சு வழங்கி இப் புனரமைப்பு வேலையை மேற்கொண்டது. (ஐ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், பெப். 18 பேராசிரியர் ப. சந்திரசேகரம் நினைவுப் பேருரை வவுனியா தேசிய கல்விக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளி பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி செ. அழகரட்ணம் தலைமையில் நடைபெறும்.

''கல்விச் செயற்பாட்டில் புதிய செய் நெறிகள்'' என்னும் தலைப்பில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (இ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் அன்னலெட்சுமி (கொட்டடி)

கொட்டடியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் அன்னலெட்சுமி 17-2-99 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், நாகேஸ்வரி, யோகலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, சண்முகலிங்கம், ஜெகதீஸ்வரி, நடேசலிங்கம் (டென்மார்க்), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம், தவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகி (கனடா), நடேசலிங்கம், சுந்தரலிங்கம், ராணி, இரவீந்திரன், ஜெயரஞ்சினி (டென்மார்க்), விமலேஸ்வரி (ஜேர்மனி), தவநாயகி, ஜெயமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தங்கராசா, நாகராசா, காலஞ்சென்ற தைரியலெட்சுமி, நாகபுஸ்பம், நாகரெத்தினம் (கோபாலு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 18-2-99 பி.ப. 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கணேசலிங்கம்
(மகன்)

91/42, காரைநகர் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(63231)

### கிறிஸ்ரியன் பேரின்பநாயகம் வைரமுத்து

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும்கொண்ட C P. வைரமுத்து (இளைப்பாறிய உப அதிபர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அவர்கள் கொழும்பில் 15-2-99 அன்று மறுமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னார் சுகிர்தத்தின் அன்புக் கணவரும் Dr. கிரிசாந்தி பத்மதேவா (லண்டன்), Dr. மனோமோகன் (ஆஸ்திரேலியா), தமயந்தி சிவசுந்தரம் (பெண்கள் கல்வி ஆய்வு நிலையம் கொழும்பு)ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. T.. பத்மதேவா (லண்டன்), Dr. சிவகௌரி (ஆஸ்திரேலியா) M. சிவசுந்தரம் (Eastar Garments Ltd.) ஆகியோரின் அன்பு மாமனாரும் மீரா, நிஷான், யாழினி, அரவிந்தன், மகிபன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான S V. வைரமுத்து, R.A. வைரமுத்து, S.R. வைரமுத்து, Dr. பாபு சிற்றம்பலம் தேவநேசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (18-2-99) வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P. டேவிட்
மானிப்பாய் வீதி, உடுவில்.

திருமதி தமயந்தி சிவசுந்தரம் (மகள்),
16 2/6, அமரசேகரமாவத்தை,
கொழும்பு-5.

(63205)

### திருமதி தம்பிப்பிள்ளை நாகம்மா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை நாகம்மா [16-02-99] செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் நல்லதம்பி இராசம்மாவின் மகளும் இராமலிங்கம் நாகம்மாவின் மருமகளும் இராமலிங்கம் தம்பிப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும் விக்னேஸ்வரராஜா [முன்னாள் ஆசிரியர்], கோகிலாதேவி [இந்தியா], தவதேவி [கொழும்பு], சண்முகானந்தராஜா [லண்டன்], நடராஜா [லண்டன்], சிவானந்கராசா [கனடா], கலாதேவி [லண்டன்] ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேராசிரியர் கா. குகபாலன் [தலைவர், புவியியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்] காலஞ்சென்ற ச.புஸ்பநாதன் [சுமிதா றேடிங் கொம்பனி உரிமையாளர், கொழும்பு], ச. விஜயா [லண்டன்[, சி. தேன்மொழி [கனடா], சுந்தரலிங்கம் [லண்டன்] ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற ந. தம்பிஐயாவின் சகோதரியும் N.A. நாகரெத்தினம் [மலேசியா], N A. வைத்திலிங்கம் [இளைப்பாறிய சிரேஷ்ட பொறியியலாளர்] அவர்களின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-02-99 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
பேராசிரியர் கா. குகபாலன்
(மருமகன்)

இல: 4,1/1, இராமகிருஷ்ணா வீதி,
கொழும்பு-6.

(63233)

## கடற்கரையோரம் சிறுவர் பூங்கா

வடமராட்சி, பெப். 18 பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில் சிறுவர் பூங்கா ஒன்று பருத்தித்துறை நகர சபையால் அமைக்கப்படவுள்ளது.

கடற்கரைப் பகுதியில் நடராஜர் கலை அரங்குக்கு அப்பால் நீச்சல் வீரர் நவரத்தினசாமியின் வரலாற்றுக்கல் அமைந்துள்ள பகுதியை உள்ளடக்கி பூங்கா அமைக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வி. விஜயரட்ணம் தெரிவித்தார்.

தற்போது நடராஜர் கலை அரங்குக்கு கிழக்குப் புறமான பகுதி கடற்கரை ஓரம் மக்கள் பாவனைக்காக பருத்தித்துறை நகரசபையின் வேண்டுதலின்பேரில் திறந்து விடப்பட்டுள்ளது. (ஐ-173)

## வட இலங்கை சங்கீத சபை செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 18 வட இலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் இந்த வருடத்துக்கான செய்முறைப் பரீட்சைகள் ஏப்பிரல் மாதம் 16 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கு நாடு முழுவதிலும் இருந்து 12 ஆயிரத்து 750 பேர் விண்ணப்பித்துள்ளனர் என வட இலங்கை சங்கீத சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## நியந்த்ரீ கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, பெப்.18 'நியந்த்ரீ' ஆதரவில் நடைபெற்று வரும் கருத்தரங்குத் தொடரின் கீழ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறும்.

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா 'ஆரம்பக் கல்வியின் அவசியம்' பற்றியும்—

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் 'வைதீக சிரார்த்தம்' பற்றியும் —

கருத்துரை வழங்குவர்.

பிரம்மஸ்ரீ அ நா. சோமாஸ்கந்தசர்மா தொடக்கவுரை ஆற்றுவார். [ஐ-152]

## திறப்பு விழா

தென்மராட்சி, பெப் .18 பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினால் ஆறு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா இன்று வியாழன் காலை 11.00 மணிக்கு அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி, கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. கயிலாயபிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலய பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். [ஐ-117]

## பாலர் நூல்களை வெளியிட்டனர்

நல்லூர், பெப். 18 நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் பாலர் கதை, பாலர் விளையாட்டுக்கள் தொடர்பான நூல்களை 'யூனிசெவ்' உதவியுடன் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் வெளியிடவுள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பாலர் கல்வியில் பரிச்சயம் மிக்க கலாநிதி சபா. ஜெயராசா மேற்படி நூல்களை எழுதவுள்ளார். (ஐ-103)

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு – கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
திரு. க. கந்தசாமி அவர்களின்
அன்புத் தந்தையார்

**கதிர். கணபதி** அவர்களின்

மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினரோடு இணைந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ப.பா.ச., பா.அ.ச.
யா/ மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(63232)

## கண்ணீர் அஞ்சலி



எமது தலைமைக் காரியாலயத்தில் எழுதுவினைஞராகக் கடமையுணர்வோடும், சேவைமனப்பாங்குடனும் கடமையாற்றி வந்தவரான

### செல்வன் இலகுப்பிள்ளை லோகேஸ்வரன்


அவர்கள் மரணமெய்திய செய்தியையறிந்து ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் நாம் எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.
வலி. கிழக்கு வ.ப.ப.நோ.கூ. சங்கம்,

தலைமைக் காரியாலயம்,
அச்சுவேலி,
புத்தூர்.

(சி-6538)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### பொன்னையா கந்தையா

மலர்வு: 02 - 06 - 1935
உதிர்வு: 19 - 01 - 1999

மண்ணக வாழ்வில் நிறைவுபெற்று
விண்ணக வாழ்வுக்காக மறைவு பெற்ற
தந்தைக்கு எமது சிந்தை கனிந்த அஞ்சலி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இத்தாவில்,
பளை.

(சி/6544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராணுவ...

[முதலாம் பக்கத் தொடர்]

றும் —

இந்தத்தாக்குதலில் அந்த முகாம் பொறுப்பதிகாரியும் மற்றொரு சிப்பாயும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இத்தாக்குதல் குறித்து இராணுவப்பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் பின்பு அந்த முகாமில் ஆயுதக்களஞ்சியத்தில் இருந்து ரி 56 ரக துப்பாக்கிகள் மூன்றும், 14 கைக்குண்டுகளும் காணாமற் போனதும் தெரியவந்துள்ளது.

அதைத் தொடர்ந்து முகாமை அண்டிய பகுதிகளில் இராணுவப் பொலீஸார்மேற்கொண்ட தேடுதலின் போது மலசலகூடக் குழி ஒன்றில் இருந்து அவை கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் பணிபுரிந்த 20 சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

இந்தத் தாக்குதல் மூலம் கடத்தப்பட்ட யுத தளபாடங்களை பாதாள உலக கும்பல்களுக்கு விற்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதா? அல்லது நாசகார நடவடிக்கை எதிலும் ஈடுபட முயற்சி மேற்கொள்ளப்பட்டதா? என்பது குறித்து பொலீஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (இ-3-10-21)


## உபநயன வாழ்த்துக்கள்

★♠★♠★♠★♠★♠★♠★

கோண்டாவில்மேற்கு திரு S சிறிஸ்கந்தராஜாக் குருக்கள் (சிறி ஐயா) திருமதி நாகேஸ்வரி சிறிஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் அன்புக் குழந்தைகளும்

சிவபதமடைந்த திரு. S. சூரியகுமார் (முகாமையாளர், ஹற்றன் நாஷனல் வங்கி, யாழ்.) அவர்களின் பெறா மக்களும்.

திருமதி பிரசாதம்மா சண்முகசுந்தரக் குருக்கள் சிவபதமடைந்த திரு. S. சண்முகசுந்தரக் குருக்களின் ஆசைப் பேரக் குழந்தைகளும்

சிவபதமடைந்த திரு. திருமதி சுவாமிநாதக் குருக்களின் ஆசைப் பேரக் குழந்தைகளுமாகிய

**செல்வன் S. சசிகாந் (சசி)**

**செல்வன் S. பிரசாந் (கோபி)**

ஆகியோருக்கு 18-02-99 இன்று நடைபெறும் உபநயனவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி P. S. சிங்கம்ஸ் குடும்பத்தினர்
சிங்கம்ஸ் பார்மசி
யாழ்ப்பாணம்.

''சிங்கம்ஸ் இல்லம்'',
கோண்டாவில் மேற்கு. (சி/6505)



## கண்ணீர் அஞ்சலி

வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்
திரு. க. கந்தசாமி அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
**கதிர். கணபதி** அவர்களுக்கு

எங்கள் கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் மாகாணக் கல்விப்பணிப்பாளரதும் குடும்பத்தாரினதும் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரி,
கிளிநொச்சி. [63230]



நாளை மறுதினம் - சனிக்கிழமை!
யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா
ஆண்டினையொட்டி
யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்க
சிறுவர் நிதிக்காக

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**
வழங்கும்
க. ரதிதரனின்

**"கானலில் ஒரு கப்படா காண்டம்"**
(நாடகம்)

காலம்: 20-02-1999 சனி இரு காட்சிகள்
காலை 10-30 பிற்பகல் 2-30
அன்பளிப்பு: ரூபா 20/- மட்டுமே
டிக்செட்டுகளை மண்டப நுழைவாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பர அன்பளிப்பு:
**சன்லைற் றைகிளீனர்ஸ்**
இல. 23, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலைய அருகில், யாழ்ப்பாணம்).
(63184)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## காணாமற்போன

# படையினர் சங்கம் புலிகள் உதவியை நாடுகின்றது

மோதல்களின்போது கைது செய்யப்பட்ட படையினர் தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு காணாமல் போன படையினரின் பாதுகாவலர் சங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பைக் கோரியுள்ளது.

'விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறு நாம் கோரவில்லை; அவர்கள் உயிருடன் உள்ளார்களா? அல்லது இறந்து விட்டார்களா? என்பதை அறியவே இந்தக் கோரிக்கையை விடுக்கிறோம்' என்று அச்சங்கம் புலிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் காவலில் 300 படையினருக்குமேல் உள்ளனர் என்று இச் சங்கம் கூறுகின்றது என்றும் —

ஆனால் புலிகள் தம்வசம் 23 படையினரே உள்ளனர் என்றுதெரிவித்துள்ளனர் என்றும் —கொழும்புச் செய்திவட்டாரங்கள் தெரிவித்தன.

## மினிபஸ் சேவை

வடமராட்சி, பெப். 18

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றிலிருந்து பருத்தித்துறைக்கான மினிபஸ் சேவை ஒன்றை மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

தினமும் காலை 7-30 மணிக்குச் செம்பியன்பற்றிலிருந்து பருத்தித்துறைக்கும் பிற்பகல் 3-00 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்றுக்கும் இச்சேவை நடைபெற்று வருகிறது. [ஐ-173]

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி காங்கேசனில் கைதிகளைச் சந்தித்தார்

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ் சிறீதரன் நேற்றுக் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்துஅங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைச் சந்தித்து உரையாடினார்.

காங்கேசன்துறையில் தற்பொழுது ஐந்து இந்திய மீனவர்கள் உட்பட 16 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நேரில் சந்தித்த மேற்படி அதிகாரி உறவினர்களினால் இவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் வழங்கினார்.

மேற்படி தடுப்பு முகாமில் உள்ளவர்கள் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களையும் அவர் எடுத்து வந்துள்ளார். இக்கடிதங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் வைத்து உரியவர்களிடம் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளன. [இ-5-173]

## இத்தாலி-இலங்கை...

[முதலாம் பக்கத் தொடர்]

யில் முறுகல் நிலை உருவாகி வருகின்றது.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் நாடு கடத்தல் உடன்பாடு இல்லாததால் சம்பந்தப்பட்ட இலங்கையரை இத்தாலிக்கு திருப்பி அனுப்ப முடியாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு இத்தாலிய அரசுக்கு அறிவித்துள்ளது.

இத்தாலியில் 50 ஆயிரம் இலங்கையர்கள் உள்ளனர் என்றும் —

இந்த விவகாரத்தை இத்தாலிய வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் அதி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளதால் இத்தாலியில் உள்ள இலங்கையர்களின் நன்மதிப்புக்கு இது பெரும் ஊறுவிளைவிக்கும் என்றும் இலங்கைக்கான இத்தாலிய உதவித் தூதுவர் பிரியாகி பெராரோ கருத்து வெளியிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட இலங்கையர் இத்தாலியில் உள்ளவீடு ஒன்றில் பணியாளராகக் கடமையாற்றி வந்தார் என்றும்—

தனது வீட்டு ஏஜமானியையே அவர் கொலை செய்துவிட்டு இலங்கைக்கு தப்பி வந்து விட்டார் என்றும்—தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இல்லாத நிலையில் மிலான் நகர நீதிமன்றம் ஒன்று இந்த கொலைக் குற்றத்துக்காக அவருக்கு 16 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கொலையாளி ஒருவர் இலங்கைக்கு தப்பி வந்துசுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவது பாரதூரமான விடயம் என்று இத்தாலிய உதவித் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## இந்.-பாகிஸ்தான் ரெஸ்ட் கிரிக்கெட்

கல்கத்தா, பெப். 18

மூன்று நாடுகள் பங்குபற்றும் ரெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கல்கத்தாவில் நடந்துவரும் இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான ஆட்டத்தில் நேற்று ஆட்டநேர இறுதியில் பாகிஸ்தான் ஒரு விக்கெட் இழப்புக்கு 26 ஓட்டங்களைப் பெற்றது,

நேற்றுக் காலை ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

(முன்னர் வந்த செய்தி 8 ஆம் பக்கத்தில்) [இ-3-6]

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்து வருகிறோம்.

நாம் பொதுமக்கள் எவரையும் கைதுசெய்யவோ அல்லது சட்டத்தை எமது கரங்களில் எடுத்து அதிகாரம்செய்யவோ இல்லை என்பதை மிக உறுதியாகத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

பரராஜசிங்கம் பாஸ்கரன் பற்றிய உண்மை நிலையை அவருடனும் அவரது பெற்றோருடனும் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளும்படியும் —

'உதயன்' பத்திரிகையின் மேற்படி செய்தியால் எமது கட்சிக்கு ஏற்பட்ட அவப்பெயரை நீக்க இந்த விவரங்களை பத்திரிகையில் வெளியிடுமாறும் கேட்டுக் கொள்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரராஜசிங்கம் பாஸ்கரன் தொடர்பாக இராணுவத் தரப்பு தமக்கு அனுப்பிய கடிதத்துக்கு தாம் அனுப்பிய பதில் கடிதத்தின் பிரதியையும் ஈ. பி. டி பி. அமைப்பு நேற்று உதயனுக்கு அனுப்பி வைத்தது.

படையினரால் கைது செய்யப்பட்டு சுமார் ஒரு மாத காலம் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டு பின்பு களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பரராஜசிங்கம் பாஸ்கரன் இரு மாதங்களின் பின்னர் அநுராதபுரம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதாகவும் —

அதன் பின்னர் பரராஜசிங்கம் பாஸ்கரன் படையினரால் கைது செய்யப்பட்டும் வீட்டில் இருந்து அழைக்கப்பட்டும் பல தடவைகள் படைமுகாமில் வைத்து தாக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டதாக அவரும், அவரது பெற்றோரும் தமது முகாமில் வந்து பல முறை முறைப்பாடு செய்ததாகவும் —

இறுதியாக தமது சுயவிருப்பத்தின் பேரில் பாஸ்கரன் தமது இயக்கத்தில் இணைந்து கொண்டதாகவும்—

இதுபற்றிய தகவலைக்கூட மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தாங்கள் தெரிவித்துவிட்டதாகவும்—

பாஸ்கரன் சுயவிருப்பத்துடன் தமது கட்சியில் இணைந்ததை உறுதிப்படுத்தி வழங்கிய கடிதத்தில் அவரது தாயார் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளார் எனவும்—

ஈ,பி.டி.பி.அந்த பதில் கடிதத்தில் வடக்கு இராணுவத் தளபதிக்கு சுட்டிக்காட்டியிருந்திருக்கிறது.

நேற்றைய உதயனில் பிரசுரமான மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனவின் கடிதம் 4-2-1999 திகதியிடப்பட்டிருந்தது. ஆனால் அக்கடிதம் நேற்று முன்தினமே ''உதயன்'' அலுவலகத்துக்குக் கிடைத்தது.

பாஸ்கரன் விவகாரம் தொடர்பாக ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே.ஜெகன் வடக்கு இராணுவத் தளபதிக்கு அனுப்பிய கடிதம் 5-2-1999 திகதியிடப்பட்டிருந்தது: (உ-3)


எமது வீடியோ
CD வெளியீடுகள்!

- உன்னைத் தேடி
- பொண்ணு வீட்டுக்காரன்
- மௌனம் சம்மதம்
- இணைந்த கைகள்
- அடுத்த வாரிசு
- தர்மதுரை
- பரிசு
- பணத் தோட்டம்
- என் அண்ணன்
- தாலி பாக்கியம்
- தாயின் மடியில்
- புனர் ஜென்மம்

**வீடியோ விஷன்**
யாழ்ப்பாணம்
(சி/6543)


## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சிக்காமல் எடுக்கப்பட்டது, அது முறையற்றது என்று மாணிக்கதாசன் தமது கண்டனத்தையும் தெரிவித்தார்.

எமது அமைப்பிடம் இருந்து ஆயுதங்களைக்களையமுற்பட்டால் நாம்கடுமையாக எதிர்ப்போம் என்றும் அவர் கூறினார்.

புளொட் அமைப்பின் தலைவர், பிரதித் தலைவர் ஆகியோர் செல்லும்போது ஆயுதங்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பது என்றும் முடிவு காணப்பட்டது. (இ-3-10-164)

## யாழ்...

[முதலாம் பக்கத் தொடர்]

காரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இவர் கைது செய்யப்பட்டதுக்கான ரசீது வழங்கப்பட்டுள்ளது. (இ-3-6)

## ஒபடகே...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டனர்,

நாளை மறுதினம் வரை யாழ்ப்பாணத்தில் தங்க உள்ள அவர் இன்று மாலை 5 மணியளவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org